# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஐந்தாம் பத்து

## இரண்டாம் திருவாய்மொழி - பொலிக பொலிக
## ஸ்ரீவைஷ்ணவர் திரளைக் கண்டு வாழ்த்தி, அல்லாதாரை உபதேசித்துத் திருத்துதல்

** பொலிக பொலிக பொலிக *
போயிற்று வல்லுயிர்ச் சாபம் *
நலியும் நரகமும் நைந்த *
நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை **
கலியும் கெடும் கண்டு கொண்மின் *
கடல் வண்ணன் பூதங்கள் மண் மேல் *
மலியப் புகுந்து இசை பாடி *
ஆடி உழி தரக் கண்டோம் 1

கண்டோம் கண்டோம் கண்டோம் *
கண்ணுக்கு இனியன கண்டோம் *
தொண்டீர்! எல்லீரும் வாரீர் *
தொழுது தொழுது நின்றார்த்தும் **
வண்டார் தண் அந்துழாயான் *
மாதவன் பூதங்கள் மண் மேல் *
பண் தான் பாடி நின்று ஆடிப் *
பரந்து திரிகின்றனவே 2

திரியும் கலி யுகம் நீங்கித் *
தேவர்கள் தாமும் புகுந்து *
பெரிய கித யுகம் பற்றிப் *
பேர் இன்ப வெள்ளம் பெருக **
கரிய முகில் வண்ணன் எம்மான் *
கடல் வண்ணன் பூதங்கள் மண் மேல் *
இரியப் புகுந்து இசை பாடி *
எங்கும் இடம் கொண்டனவே 3

இடங்கொள் சமயத்தை எல்லாம் *
எடுத்துக் களைவன போலே *
தடங்கடல் பள்ளிப் பெருமான் *
தன்னுடைப் பூதங்களே ஆய் *
கிடந்தும் இருந்தும் எழுந்தும் *
கீதம் பல பல பாடி *
நடந்தும் பறந்தும் குனித்தும் *
நாடகம் செய்கின்றனவே 4

செய்கின்றது என் கண்ணுக்கு ஒன்றே *
ஒக்கின்றது இவ்வுலகத்து *
வைகுந்தன் பூதங்களே ஆய் *
மாயத்தினால் எங்கும் மன்னி **
ஐயம் ஒன்றில்லை * அரக்கர்
அசுரர் பிறந்தீர் உள்ளீரேல் *
உய்யும் வகை இல்லை தொண்டீர்! *
ஊழி பெயர்த்திடும் கொன்றே 5

கொன்று உயிர் உண்ணும் விசாதி *
பகை பசி தீயன எல்லாம் *
நின்று இவ்வுலகில் கடிவான் *
நேமிப் பிரான் தமர் போந்தார் **
நன்று இசை பாடியும் துள்ளி
ஆடியும் * ஞாலம் பரந்தார் *
சென்று தொழுது உய்ம்மின் தொண்டீர்! *
சிந்தையைச் செந்நிறுத்தியே 6

நிறுத்தி நும் உள்ளத்துக் கொள்ளும் *
தெய்வங்கள் உம்மை உய்யக் கோள் *
மறுத்தும் அவனோடே கண்டீர் *
மார்க்கண்டேயனும் கரியே **
கறுத்த மனம் ஒன்றும் வேண்டா *
கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை *
இறுப்பது எல்லாம் * அவன் மூர்த்தியாய்
அவர்க்கே இறுமினே 7

இறுக்கும் இறை இறுத்து உண்ண *
எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி *
நிறுத்தினான் தெய்வங்கள் ஆக *
அத்தெய்வ நாயகன் தானே **
மறுத் திரு மார்வன் அவன் தன் *
பூதங்கள் கீதங்கள் பாடி *
வெறுப்பின்றி ஞாலத்து மிக்கார் *
மேவித் தொழுது உய்ம்மின் நீரே 8

மேவித் தொழுது உய்ம்மின் நீர்கள் *
வேதப் புனித இருக்கை *
நாவில் கொண்டு அச்சுதன் தன்னை *
ஞான விதி பிழையாமே **
பூவில் புகையும் விளக்கும் *
சாந்தமும் நீரும் மலிந்து *
மேவித் தொழும் அடியாரும் *
பகவரும் மிக்கது உலகே 9

மிக்க உலகுகள் தோறும் *
    மேவிக் கண்ணன் திரு மூர்த்தி *
நக்க பிரானோடு * அயனும்
    இந்திரனும் முதலாக **
தொக்க அமரர் குழாங்கள் *
    எங்கும் பரந்தன தொண்டீர்! *
ஒக்கத் தொழ கிற்றிர் ஆகில் *
    கலி யுகம் ஒன்றும் இல்லையே 10

** கலி யுகம் ஒன்றும் இன்றிக்கே *
    தன் அடியார்க்கு அருள் செய்யும் *
மலியும் சுடர் ஒளி மூர்த்தி *
    மாயப் பிரான் கண்ணன் தன்னை **
கலி வயல் தென்னன் குருகூர்க் *
    காரி மாறன் சடகோபன் *
ஒலி புகழ் ஆயிரத்து இப்பத்து *
    உள்ளத்தை மாசு அறுக்குமே 11

---